## பேலியகொட நகர சபை

## கம்பஹா மாவட்டம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 25 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பேலியகொட நகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்பட்ட 17 செயற்திட்டங்களுக்காக கிடைக்க வேண்டிய நிதியுதவிகளின் பெறுமதியான ரூபா 1,401,578 தொகை கணக்கு வைக்கப்படவில்லை.

(ஆ) பாதுகாப்புச் சேவைக்குச் செலுத்த வேண்டிய பணம் ரூபா 126,207 ஆக இருந்த போதிலும் வருமானச் செலவினக் கணக்கிலும் கடன்கொடுத்தோர் கணக்கிலும் ரூபா 1,236,207 ஆக கணக்கு வைக்கப்பட்டமையின் காரணமாக செலவினம் மற்றும் பொறுப்புக்கள் ரூபா 1,110,000 இனால் அதிகரித்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(இ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 288,697 பெறுமதியுடைய அட்டுறு மூலதனச் செலவினமொன்று கணக்கு வைக்கப்படாமையினால் அந்த பெறுமதியால் மூலதனச் செலவினம் மற்றும் கடன்கொடுத்தோர் என்பன குறைத்துக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட முற்பணத்தைத் தீர்க்கும் போது செலவிடப்படாத ரூபா 19,260 தொகையான மிகுதித் தொகை திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டமையால் அப்பெறுமதியால் திரண்ட நிதியம் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 220,891 தொகையான எரிபொருள் செலவினம் கடன்கொடுத்தோராகவும், எரிபொருள் செலவினமாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டில் மின்பிறப்பாக்கிகளைக் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 3,982,027 தொகை மூலதனச் செலவினமாகக் கணக்கு வைக்கப்படாமல் ஆண்டின் மீண்டெழும் செலவினமாகக் கணக்கு வைக்கப்பட்ட இந்த சொத்து மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 26,795 தொகையான பொருட்கள் களஞ்சியக் கணக்கில் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளுக்கும், பதிவேடுகள் / பட்டோலைகளுக்குமிடையே 05 விடயங்களின் வேறுபாடுகளின் கூட்டுமொத்தம் ரூபா 588,656 ஆகும்.

(ஆ) களஞ்சியப் பெறுவனவுப் பத்திரத்தின் பிரகாரம் மீளாய்வாண்டில் ரூபா 4,106,319 தொகையான பொருட்கள் கிடைத்திருந்த போதிலும், களஞ்சிய இருப்புக் கணக்கின் பிரகாரம், அது ரூபா 3,112,365 ஆனமையால் ரூபா 993,954 தொகையான வேறுபாடு காணப்பட்டதுடன் களஞ்சிய விநியோகித்தல் பத்திரத்தின் பிரகாரம் மீளாய்வாண்டில் ரூபா 2,142,493 தொகையான பொருட்கள் களஞ்சியத்திலிருந்து விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்கின் பிரகாரம் ரூபா 3,956,516 ஆனமையால் ரூபா 1,814,023 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (அ) பெற வேண்டிய கணக்குகள்

(i) 2014 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 3,966,656 தொகையான பெற வேண்டிய உதவிப் பணத்தைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதிப்பிழந்த காசோலைக் கணக்கில் இருந்த ரூபா 192,715 தொகையான அறவிட வேண்டிய பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் வைப்புச் செய்யப்பட்டு 02 வருடங்களை விஞ்சிய ரூபா 123,345 தொகையான நிறுத்தி வைத்தல் பணம் மற்றும் ரூபா 55,280 தொகையான கேள்வி வைப்பு என்பவற்றை ஓய்வுபெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 12,932,516 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 20,996,351 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ |
| வீதவரியும் வரியும் | 40,500 | 41,450 | 42,792 | 26,754 | 40,000 | 40.197 | 44,023 | 28,096 |
| வாடகை | 3,499 | 3,229 | 3,264 | 103 | 2,424 | 1,250 | 2,285 | 139 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,127 | 1.990 | 1,990 | - | 1,522 | 2.308 | 1,284 | - |
| ஏனைய வருமானம் | 19,480 | 6,353 | 6,353 | - | 17,899 | 15,604 | 15,603 | - |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டில் வீதவரியும் வரியினதும் நிலுவை வருமானமான ரூபா 28,095,593 இனால் மீளாய்வாண்டில் ரூபா 7,954,586 தொகை மாத்திரம் அறவிடப்பட்டமையால் அதன் அறவிடும் சதவீதம் 28 ஆக இருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டின் நிலுவை வருமானமான ரூபா 138,910 இனால் மீளாய்வாண்டில் அறவிடப்பட்ட தொகை ரூபா 60,077 மாத்திரம் ஆனமையால் நிலுவையின் அறவிடல் 43 சதவீதமாக இருந்தது.

(இ) ஏனைய வருமானத்திற்காக சிட்டையிடப்பட்ட தொகை ரூபா 6,352,773 ஆக இருந்ததுடன் மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூபா 19,480,000 ஆனமையால் மதிப்பீடு செய்தல் சாத்தியமான முறையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்

(அ) நகர அதிகாரப் பிரதேசத்தில் சுற்றுலா அதிகாரச்சட்டத்தின் கீழ் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்துள்ள 02 விருந்தினர் விடுதிகளிலிருந்து அறவிடப்பட்ட ரூபா 137,959 தொகையான அனுமதிப்பத்திரக் கட்டணத்திற்காக கடந்த ஆண்டில் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு மொத்த புரள்வின் அடிப்படையில் 01 சதவீதத்தை விஞ்சாத கட்டணமொன்று இனங்காணப்பட்டு அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காலரீதியான அனுமதிப்பத்திரக் கட்டணம், கைத்தொழில் வரி மற்றும் வியாபாரி வரிகள் திருத்தம் செய்யப்பட்டு சபையின் வருமானத்தை வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் நகர சபைக் கட்டளைச்சட்டத்தின் மூலம் 1988 இன் போது விதிக்கப்பட்டிருந்த அனுமதிப்பத்திரம், வியாபார மற்றும்

கைத்தொழில்களின் கட்டணங்கள் எந்தவித திருத்தங்களின்றி அவ்வாறே மீளாய்வாண்டிற்காகவும் அறவிடப்பட்டிருந்தது.

**2.2.4 முத்திரைக் கட்டணம்**

2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்காக ஒவ்வொரு வருடத்திற்கான முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 10,000,000 வீதம் பாதீட்டில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்த வருமானங்களை காணிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

நகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய இலக்குகளுக்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செயற்திட்டம் நிறைவேற்றப்படாமை**

மீளாய்வாண்டிற்காக சபை நிதியத்தின் மூலம் நிதிஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 5,780,382 தொகையான 07 செயற்திட்டங்களுக்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், அவை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**(இ) இலக்குகளை நிறைவேற்றுவதில் தாமதம்**

அலுவலகமொன்றை நிர்மாணிப்பதற்காக 2017 நவம்பர் 01 ஆந் திகதி ரூபா 222,120 தொகை செலவில் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், 2018 மே 14 ஆந் திகதி வரையிலும் முன் அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

(i) வகைப்படுத்தப்பட்ட உக்கும் கழிவுப்பொருட்கள் கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகாரசபையின் திக்ஓவிட்ட உயிரியல் வாயுத் தளத்திற்கு 01 தொன் ரூபா 592 வீதம் 2017 மார்ச் 17 முதல் 2018 மாரச் 16 ஆந் திகதி வரை வழங்குவதற்காக நகர சபையினால் கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகாரசபையுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதாவது வகைப்படுத்தப்பட்ட ஒரு தொன் கழிவுப்பொருள் ரூபா 3,000 வீதம் 76.18 தொன் கழிவுகளும் மற்றும் வகைப்படுத்தப்படாத கலப்பு கழிவுகள் ஒரு தொன் ரூபா 5,000 தொனை அலகுகள் வீதம் 115.5 தொன் கழிவுகள் மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் இலங்கை நில மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் கெறவலபிட்டிய கழிவுப்பொருள் தளத்திற்கு

கொண்டு போடப்பட்டிருந்ததுடன் அதற்காக, ரூபா 1,198,875 தொகை கொடுப்பனவு செய்வதற்கு சிபாரிசு செய்யப்பட்டிருந்தது.

(ii) வகைப்படுத்தப்பட்ட உக்கும் கழிவுப்பொருட்களின் முழுமையான அளவையும் கூட்டுப்பசளைத் தளத்திற்கு கொண்டு போடுவதற்கு திக்ஓவிட்ட செயற்திட்டத்தின் இயலளவு போதியளவில் இல்லாமையின் காரணமாக, பேலியகொடை துட்டகைமுனு மாவத்தையில் கொழும்பு கட்டுநாயக்க அதிவேக வீதிக்கு அண்மையில் உள்ள 02 ஏக்கர் அளவிலான பரந்தளவான நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரிய சதுப்பு நிலத்துடனான காணியொன்றில் முறையற்றதாக சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் திறந்த நிலத்தில் கழிவுப்பொருட்கள் போடப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் அதிகமான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கழிவுகளை அகற்றும் நடவடிக்கைகள் செயற்திறனானதாகவும், ஆக்கபூர்வமானதாகவும் முகாமைத்துவம் செய்யப்பட்டிருக்கவில்லை.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை தெளிவுபடுத்தியிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

(அ) சபைக்குச் சொந்தமான 02 கெப் வண்டிகள் மற்றும் பெகோ இயந்திரம் ஒன்று என்பன தொலைந்து போயிருந்தமை தொடர்பாக நியமிக்கப்பட்டிருந்த ஒழுக்காற்று பரிசோதனைக் குழுவினால், பாதுகாப்பு சேவை அதற்காக பொறுப்பு கூற வேண்டியிருந்தமையும் மூன்று வாகனங்களின் சாவி முறைமையை முழுமையாக மாற்றி புதிய சாவி முறைமையொன்றைப் பொருத்துவதற்கு ஏற்பட்ட செலவினம் பாதுகாப்பு சேவை (தனியார்) கம்பனியிலிருந்து அறவிடுதல் பொருத்தமானது எனவும், 2017 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய அறிக்கையில் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், 2017 திசெம்பர் 07 ஆந் திகதி வரையிலும், சாவி முறைமையை மாற்றுவதற்கும், உரிய நட்டத்தை பாதுகாப்பு சேவை (தனியார்) கம்பனியிலிருந்து அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேற்கூறப்பட்ட வட்டி விகிதத்துடன் முதலீட்டு வழிகளில் ஈடுபடுத்தாமல் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 620,722 பெறுமதியொன்று சேமிப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஒரு பொக்குண வத்த III ஆவது ஒழுங்கைக்கு கல் இட்டு கொங்கிறீட் இடுவதற்காக ரூபா 249,922 தொகை செலவிடப்பட்டிருந்தது. இந்த வீதி சபைக்குரித்தற்ற வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான காணியொன்றில் அமைந்துள்ள அனுமதியற்ற நிர்மாணங்கள் நடைபெறுகின்ற தற்காலிக வீடமைப்புத் தொகுதியில் அமைந்துள்ள வீதியொன்றாக இருந்தது.

(ஆ) நகர மத்தியில் அமைந்துள்ள 114 ஆம் ஆதனவரி இலக்கத்தில் நகர சபைக்குச் சொந்தமான ஆதனத்தின் வருடாந்த வாடகைக் காலம் 2016 யூலை 28 ஆந் திகதி முடிவடைந்தமையினால் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மீண்டும் சபைக்கு கையேற்பதற்கு 2016 செப்தெம்பர் 02 ஆந் திகதி நிதிக்குழு தீர்மானித்திருந்தது. அதாவது வாடகையாளரினால் அங்கீகாரமின்றி 2017 திசெம்பர் 13

ஆந் திகதி வரை நிர்மாணங்களுடன் வியாபார நடவடிக்கைகள் நடாத்திச் செல்லப்பட்டிருந்ததுடன் மேற்கூறப்பட்ட பொருளாதார பெறுமதியுடைய இந்தக் காணியை மீண்டும் சபைக்குக் கையேற்பதற்கு சபை தவறியிருந்தது.

(இ) மிகவும் சனநெருக்கடியுள்ள மற்றும் உயர்ந்த பொருளாதார பெறுமதியுடைய பேலியகொடை நகர பிரதேசத்தில் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான 28 கடைகளுக்காக 1986 திசெம்பர் 31 ஆந் திகதிய 46 ஆம் இலக்க உள்ளூராட்சித் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக 25 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் உடன்படிக்கை செய்யப்பட்ட மிகவும் குறைந்த மாதாந்த வாடகையொன்று அறவிடப்பட்டிருந்தது. 2018 ஏப்ரல் 25 ஆந் திகதிய யூ.சீ.பீ.ஈ/03/01/கடை வாடகை/2017/01 ஆம் இலக்க மதிப்பீட்டுத் திணைக்களத்தின் கடிதம் மூலம் கடை வாடகை திருத்தம் செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த மதிப்பீட்டின் பிரகாரம் வாடகை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

-------------------------------------------------

### (அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு

---------------------------------------------------------

சபைக்குச் சொந்தமானதாக பாதீட்டில் உறுதிப்படுத்தப்பட்ட 12 வாகன விடயங்களுக்குரிய மெய்மையாய்வை மேற்கொண்டு அவற்றின் பௌதீக இருப்பு உறுதிப்படுத்தப்படவில்லை.

### (ஆ) தீர்த்து வைக்கப்படாத சபையின் ஆதனங்கள்

---------------------------------------------------------------------

நிலையான சொத்துப் பதிவேட்டின்பிரகாரம் சபைக்குச் சொந்தமானது என இனங்காணப்பட்டிருந்த 76 காணி ஆதன விடயங்களுக்காக காணி உரித்துறுதி மூலம் உரித்து உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.4.1 வாகனப் பயன்பாடு

-------------------------------

(i) 2004 ஆம் ஆண்டு முதல் சபைக்குச் சொந்தமான உடைந்த வாகனங்களாக இனங்காணப்பட்ட 05 ரெக்டர் ரேலர்கள், 02 என்ஜீன்கள், 01 முச்சக்கர வண்டி மற்றும் 01 கல்ரோல் என்பவற்றை விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2016 திசெம்பர் 06 ஆந் திகதி விசேட மெய்மையாய்வுச் சபையின் மூலம் தீர்மானிக்கப்பட்ட அகற்றப்பட வேண்டுமென 11 வாகன விடயங்கள் தொடர்பாக அவற்றின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 பெறுகைகள்

--------------------

### ஒப்பந்த நிர்வாகம்

-------------------------------

பேலியகொடை நகர சபைக்குரிய 90 வத்த மலசலகூட முறைமை அபிவிருத்தி செய்யும் திணைக்களத்தின் வேலை இலக்கம் D இல் Septic Tank வேலை விடயத்தின் கிரயம் பகுப்பாய்வு செய்யப்படாமல் ரூபா 600,000 செலவினமொன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்காக செலவிடப்பட்ட உள்ளபடியான செலவினம் ரூபா 241,850 ஆனமையால் மதிப்பீடு தயாரிக்கும் போது பொருத்தமான அடிப்படைக்குப் புறம்பாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. நகர சபைக்குச் சொந்தமான கலிபவுசர் சேவையொன்று காணப்படும் போது, இறுதிக் கொடுப்பனவு அறிக்கையில் வேலை இலக்கம் F3 இல் மலசலகூட

முறைமையில் மலக்கழிவுகளை அகற்றும் வேலை விடயத்திற்காக ரூபா 11,000 தொகையான வினைத்திறனற்ற செலவினமொன்று செய்யப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் மூலதனச் செலவின நிதிஏற்பாட்டுப் பொழிப்பின் பிரகாரம் 09 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடு ரூபா 1,000 வீதம் ஆனமையால் பாதீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடு சாத்தியமான முறையில் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் அதன் பிரகாரம் நிதிஏற்பாட்டைப் ஏற்படுத்தும் எதிர்பார்த்த நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| | முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) | வருமான முகாமைத்துவம் | நிலுவை வருமான அறவிடல் நலிவான நிலையில் காணப்பட்டமை |
| (ஆ) | கணக்கீடு | இணக்கமின்மைகள் மற்றும் கணக்குகளுக்குக் கொண்டுவரப்படாமை காணப்பட்டமை |
| (இ) | சொத்துக் கட்டுப்பாடு | உரித்து உறுதிப்படுத்தப்படாமை மற்றும் மெய்மையாய்வு நடாத்தப்படாமை |